1971 டிசம்பர் 13]

### மீன் ஏற்றுமதி

* 310 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளர்ப்புத் துறையின் மூலம் வெளிநாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கேரள மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏராளமான இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதைப்போல இங்கிருந்தும் இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யும் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கிட்டத்தட்ட 2.49 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இரால் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் மீன் வளத்துறை மூலமாக அவை ஏற்றுமதிச் செய்யப்படவில்லை. எண்ணூரில் குளிர்பதன அறை கட்டி, தனியாருக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறோம். அவர்கள் மீனைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அரசாங்கமே இதை நடத்தும் திட்டம் இல்லை.

மு.ப. 9·30

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்போது சென்னை கடற்கரையில் இரால் மீன்கள் கிடைப்பதில்லை என்று ஒரு புகார் வந்திருக்கிறது. அதுகுறித்து அரசாங்கம் ஏதாவது ஆராய்ச்சி செய்ததா ; நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரால் மீன்கள் கிடைக்காமல் இல்லை. தனியார்கள் இந்த மீன்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். அவர்கள் பெரிய மீன்களை ஏற்றுமதி செய்து விடுவதால், இங்கு சிறிய இரால் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லா கடல் பகுதியில், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வந்து மீன் பிடித்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். அதனால் நமக்கு அதிக லாபம் கிடைப்பதில்லை. எனவே, கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து மீன் பிடிக்கக் கூடாது என்று நமது அரசாங்கம் தடை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. ஆனால், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களை இங்கு வந்து மீன்பிடிக்கக்கூடாது

என்று தடுக்க முடியாது. ஏனென்றால் பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் அதாவது இன்டர் நேஷனல் வாட்டர்ஸில் யார் வேண்டு மானாலும் மீன் பிடிக்கலாம்.

### மீன் வளம்

* 311 வின—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் மீன் வளத்தை அதிகப்படுத்தவும், பிடிப்ப தற்கும் தீவிர திட்டம் (Crash Programme) அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செயற்குறிப்பில் இல்லை ; நடைமுறையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு 'கிராஷ் புரோகிராம்' என்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். அதைப்போன்று மீன் பிடிப்பதிலும் ஒரு கிராஷ் புரோகிராம் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இன்றைய உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதால் அரசாங்கம் இத் திட்டத்தைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது ஒரு கிராஷ் புரோகிராம் ஏற்கெனவே நிறுவப்பட்டு, நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. அதில் சிலவற்றை இங்கே குறிப்பிடு கிறேன் :—

இராமஸ்வரம் பறங்கிப்பேட்டை ஆகிய ஊர்களில் 2 டன் பனிக்கட்டிப்பொறி-குளிர்ப்பதன அறைகள் இரண்டையும், இராயபுரம், அடையாறு, புதுப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை ஆகிய ஊர்களில் ஆறு குளிர் அறைகளையும் நிறுவுதல்.

நான்காவது திட்டக் காலத்தில் அதிக படகுகளைக் கட்டும் பணியை மேற்கொள்ள போதுமான பணியாளர்களை நியமிப் பதற்கும், சாதனங்கள் வாங்குவதற்கும் வகை செய்து, மெரினா மற்றும் இராயபுரத்திலுள்ள படகு கட்டும் தளங்களை வலுப் படுத்துதல்.

நான்காவது திட்டக் காலத்தில் கூடுதலாகத் தேவைப்படும் பயிற்சி பெற்ற பணியாளர் குறித்த தேவையை ஈடுசெய்ய கடலூர், குளச்சல் ஆகிய ஊர்களில் பயிற்சி நிலையங்கள் இரண்டை அமைத்தல்.